ஆண்டு காலமாகவே மத்திய அரசாங்கத்திலிருந்து இந்தத் திட்டத்திற் கான பணம் வருவது மிகக் குறைவாக இருக்கிறது. குறிப்பாக திருப்பூர் போன்ற தொழில் நகரங்களில் விரைவாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன் வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. என்.வி. நடராசன் : இ.எஸ்.ஐ. நிறுவனத்தி னுடைய நிதிநிலை சற்றுக் கூடியிருப்பதாக மத்திய தொழிலாளர் அமைச்சர் கடில்கர் தெரிவித்திருக்கிறார். அதற்கேற்ப தமிழ்நாட்டுக்கு அதிகமாக நிதி ஒதுக்குமாறு மடல் தீட்டியிருக்கிறோம்.

திரு. கு. காமாட்சி : சுமார் பத்தாயிரம் தொழிலாளர்கள் வாழும் பகுதியாக திருவெறும்பூர் மாறி இருக்கிறது. அந்தப் பகுதியில் இந்தத் திட்டத்தின்கீழ் மருத்துவமனை நிறுவ அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : நிதிநிலைக்கேற்ப அது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. ந. தருமலிங்கம் : தென்னாற்காடு மாவட்டத்தில் தொழிலாளர் களுக்காக இந்தத் திட்டத்தின்கீழ் மருத்துவ மனை கட்ட அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இதுபோன்ற யோசனைகள் எல்லாம் தக்க சமயத்தில் பரிசீலனை செய்யப்படும்.

பண்ணைவாடி அரிசன மக்களுக்கு வீட்டு மனைகள்.

*108 வினா: திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

மேட்டூர் தாலுக்கா, பண்ணைவாடி கிராமம் அரிசன சேரி மக்களுக்கு வீட்டு மனை வழங்குவதற்கான நிலம் தேர்வு செய்யப்பட்டு ஆர்ஜிதம் செய்வதற்கான நடவடிக்கைகள் தற்போது எந்த நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பண்ணைவாடி அரிசன சேரி மக்களுக்கு வீட்டு மனை வழங்குவதற்காக அந்த ஊரிலுள்ள நி.அ. எண் 1505, 1503/ஏ, 1503/பி-ல் உள்ள 1·41 ஏக்கர் நிலங்களை ஆர்ச்சிதம் செய்வதற்காக நில உரிமை பெறும் சட்டத்தின் பிரிவு 4 (1)-ன் கீழ் விளம்பர அறிக்கை 15—4—1970 தேதியில் அரசிதழில் வெளியிடப்பட்டு பிரிவு 6-ன் கீழ் உறுதிமொழி அறிக்கை 9—6—1971-ல் அரசிதழில் வெளியிடப்பட்டது. இந் நிலங்களின் சரியான விலை நிர்ண யிக்கப்பட்டதும் நில விலைத் தீர்வு (அவார்டு) வழங்கப்பட்டு, நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, அரிசன மக்களுக்கு விரைவில் வீட்டு மனைகள் வழங் கப்படும்.